UNHCR
ஐ.நா.அகதிகள் நிறுவனம்

# பாதுகாப்பில் கவனம் செலுத்துதல்

ஒரு யு.என்.எச்.சி.ஆர்.இலங்கை வெளியீடு

# அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம் பாதுகாப்பில் உதவுகின்றது

## அகதிகளையும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த அகதிகளையும்

ஆடி 2003
புதிப்பு 1

**இச் செய்தி அறிக்கையில். . .**

1. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்தின் பிரதிநிதியின் கடிதம்.

2. பின்னணி.

3. பாதுகாப்பு என்றால் என்ன?

4.-10 பாதுகாப்பு பற்றிய கணநேர விளக்கம்.

5. கவனத்திலுள்ள திட்டம் : காணியும் சொத்துக்கள் பற்றிய பிரச்சனைகளும்.

7. கவனத்திலுள்ள திட்டம் : சமாதானமான சகவாழ்வு வாழ்தல்.

11. வரைபடம் : ஸ்ரீலங்காவில் இடம் பெயர்ந்த மக்கள் - திரும்பச் செல்வோரின் நடமாட்டங்கள்.

12. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்தின் வெளிகள மற்றும் தொலைவில் நடமாடும் காரியாலயங்கள்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம், ஐக்கிய நாடுகள் சபையினால் அகதிகளுக்கும், இடம் பெயர்ந்த மக்களுக்கும் உலகம் பூராவுமான பாதுகாப்பும் உதவிகளும் வழங்குவதற்காக சர்வதேச நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இணைந்து செயலாற்றுவதற்கும் ஆணை வழங்கப்பட்ட நிறுவனமாகும்.



UNHCR / B.Barrett / 2003

### அன்பான வாசகரே,

ஸ்ரீலங்கா நாட்டில் ஏற்பட்டுள்ள பிணக்குகளின் காரணமாக இலட்சக் கணக்கான மக்கள் நாட்டின் சகல பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். இப் பலவீனமான நபர்களைப் பாதுகாக்கும் கடமை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்தைச் சார்ந்ததாகும். இத்தகைய பாதுகாப்பினை வழங்குவது ஓர் சிக்கலான பிரச்சனையாகும். இதனை செவ்வனே மேற்கொள்வதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்தின் உத்தியோகத்தர்கள், நாட்டின் நிர்வாகிகளுடனும் இதனுடன் தொடர்புபட்ட ஏனைய அங்கத்தினர்களுடனும் சேர்ந்து பணியாற்ற வேண்டியுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனமும் அதனுடன் இணைந்து செயற்படுபவர்களும், மேற்கொள்ளும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளைப் பற்றிய விசாலமான தகவல்கள், ஸ்ரீலங்காவில் நிலவும் சிக்கலான பாதுகாப்பு நிலைமைகளைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பும் எவரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாகவே அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம் இத்தகையதோர் புதிய செய்தி அறிக்கையை வெளிக் கொணரக் காரணமாகும்.

“பாதுகாப்பு பற்றி உற்றுநோக்குதல்” எனும் இச் செய்தி அறிக்கை, பாதுகாப்பு தொடர்பான தகவல்களை மக்களுக்கு கிடைக்கச் செய்வதே நோக்கமாகும். இம் முதல் செய்தி அறிக்கையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் விசாலமான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய சுருக்கமான மேலோட்டமான கருத்துக்களை உங்களுக்கு நாம் தருகின்றோம். தொடர்ந்து வரும் பதிப்புக்களில், எமக்குட்பட்ட பாதுகாப்பு கடமைகளின் எல்லைகளுள் நாம் மேற்கொள்ளும் பல்வேறுபட்ட விடயதானங்களின் பிரச்சனைகள் பற்றிய எமது ஆழ்ந்த எண்ணக் கருத்துக்களை வெளிப்படுத்தவுள்ளோம். நீங்களும், எதிர்காலத்தில் உங்களைப் பின்பற்றி இச் செய்தி அறிக்கையினை வாசிப்பவர்களும் மகிழ்ச்சி அடைவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

**நீல் ரைட்**
**அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்தின் - ஸ்ரீலங்கா பிரதிநிதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னணி

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம் (UNHCR) ஸ்ரீலங்காவில் 1987ம் ஆண்டு முதல், அதாவது இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்து ஸ்ரீலங்காவில் பணியாற்றத் தொடங்கியது. அச் சமயத்தில், ஸ்ரீலங்கா அரசாங்கம் தென் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த ஸ்ரீலங்கா அகதிகளை தாய் நாட்டிற்கு மீண்டும் அழைத்து வருவதற்கான உதவிகளை வழங்குமாறு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது. ஆனால் 1987ம் ஆண்டு சமாதான உடன்படிக்கை போர் நிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வர முடியவில்லை. இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான ஸ்ரீலங்கா மக்கள் நாடு பூராவும் இடம் பெயர்ந்த வண்ணமே இருந்தனர். இத்தகைய சந்தர்ப்பத்தில் மனிதநேய உதவிகளை வழங்குவதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்தினை ஸ்ரீலங்கா அரசு வரவேற்றது. இதனைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் ஸ்ரீலங்கா அரசின் அனுமதியுடன் ஸ்ரீலங்கா நாட்டின் எல்லையினுள் இடம் பெயர்ந்த மக்களுக்கான பாதுகாப்பினையும் உதவிகளையும் வழங்குவதற்கு, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்திற்கான கடமைப்பாடுகளை விரிவாக்கினார்.

## உள்நாட்டு இடம் பெயர்வு

ஊலகம் பூராவும் பரவியுள்ள சிக்கலான பிரச்சனைகள் மத்தியில், உள்நாட்டு இடப் பெயர்வு தொடர்பாக குறிப்பாக கவனம் செலுத்தும் கடமைப்பாடு புதியதோர் அதிசயச் சம்பவம் போல் தோற்றமளிக்கின்றது. இதன் தொடர்ச்சியாக, ஸ்ரீலங்காவில் உள்ள உள்நாட்டு இடம் பெயர்ந்த மக்களிற்கான பாதுகாப்பினை வழங்கும் அனுபவம், வேறு இடங்களிலுள்ள உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் திடீர் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முன்னுதாரணமாக விளங்குகின்றது. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அனுபவம் ஏனெனில் நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட பிணக்குகளின் விளைவாக உள்நாட்டில் உருவான யுத்த நிலைமைகள் உள்நாட்டு பெயர்வின் விளைவுகளை அதிகரிப்பதாக உள்ளது. இத்தகைய பிரச்சனைகளின் போது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்தின் பாதுகாப்பு தீர்வு திட்டமானது இடப் பெயர்வின் போது கடைப்பிடிப்பிடிகக்கப் படவேண்டிய வழிகாட்டும் கொள்கைகளினால் நெறியாளப்படுகின்றது. 2002ம் ஆண்டு நடாத்தப்பட்ட உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களைப் பற்றிய ஆய்வு புவியியல் தகவல் ஒழுங்கு முறையினால் (GIS) உதவி செய்யப்பட்டது. இது புவியியல் ரீதியான இடங்களைப்பற்றியும், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் தொகை மதிப்பீடு பற்றிய விசாலமான ஆய்வுகளுடனும் தொடர்பு பட்டதாக அமைந்தது. இவ்வாய்வின் போது உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் பெருந்தொகையானோர் மீண்டும் தமது சொந்த இடத்திற்குச் செல்வதற்கான விருப்பத்தைத் தெரியப்படுத்தினர். ஆயினும் பாதுகாப்புடனான கௌரவமான மீள் திரும்புதல் நடவடிக்கைகளில் பல தடைகள் காணப்படுகின்றன. இத்தகைய தடைகளில் சில மிகவும் முக்கிமான காரணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- அழிவின் நிலைமைகள்
- காணி, வீடு மற்றும் சொத்துக்களை அடைவதற்கான வழிமுறைகள்.
- தொடர்ச்சியாகக் காணப்படும் நிலக்கண்ணி வெடிகளும், வெடிக்காத நிலையில் காணப்படும் யுத்த தளபாடங்களும் ($UXO_S$)
- சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் குறைபாடுகள்.
- தொடர்ந்தும் இடம் பெற்ற வண்ணமுள்ள மனித உரிமை மீறல்களும் அத்துடன் மனித பாதுகாப்பு பற்றி சம்பந்தப்பட்ட விவகாரங்களும்.
- மீளவும் வன்முறைகள் ஆரம்பிக்கக் கூடும் என்ற பயமும்.

இத்தகைய தடைகள் முன்னேற்றகரமான நிலைக்கு மீளும் வரையில், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம் ஒழுங்குபடுத்தப்பட்ட பரந்தளவில் மீள் திரும்புதலை முன்னெடுத்துச் செல்லவோ அல்லது நடைமுறைப்படுத்தவோ மாட்டாது. அதே வேளையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம் தன்னுடன் இணைந்து செயற்படும் கூட்டு இயக்கங்களுடன் சேர்ந்து உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்காக வழங்கப்படும் பாதுகாப்பு மற்றும் உதவிகளுக்காக வேலை செய்து கொண்டிருக்கும்.

**அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம் ஸ்ரீலங்காவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காணப்படும் நிலைமைகள் பரந்தளவில் ஒழுங்கு படுத்தப்பட்ட மீள் திரும்புகைக்கு உகந்ததல்ல என்ற எண்ணப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கின்றது.**

### 2003ம் ஆண்டில் அகதிகளுக்கான ஐக்கியநாடுகளின் உயர் ஸ்தாபனத்தின் பிரதான நோக்கங்கள்

- உள்நாட்டில் இடப்பெயர்விற்கான வழிகாட்டும கொள்கைகளுக்கு அமையவும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதநேய சட்டக கொள்கைகளுக்கு ஏற்பவும் உள்நாட்டில இடம் பெயர்ந்த மக்கள், மீள்திரும்புவோர், அகதிகள் ஆகியோருக்கான பாதுகாப்பு உரிமைகளை வழங்குவது தொடர்பாக ஊக்கமளிப்பதும்.
- ஸ்ரீலங்காவின் எஞ்சியுள்ள உள்நாட்டில இடம் பெயர்ந்த மக்களுக்கும் அகதிகளுக்கும திடமான தீர்வுகளைத் தரக்கூடிய நிலைமைகளை உருவாக்குவதற்காகவும் முன்னேற்றம் செய்வதற்காகவுமான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்வதும் நடைமுறைப்படுத்துவதும்.
- மாறிவரும் தேவைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய ஆற்றல்களை வளர்ப்பதற்காக தேசிய அரசாங்கத்தினதும் அரசு சார்பற்ற நிறுவனங்களினதும் ஆற்றல்களை வலுப்படுத்தும் நோக்குடன பயிற்சித் திட்டங்களையும் நேரடி ஈடுபாடுகளையும் ஏற்படுத்துவதும்.

**உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் பாதுகாப்பான மீள்திரும்புதலை, நிலக் கண்ணி வெடிகளும் வெடிக்காத நிலையிலுள்ள யுத்த தளபாடங்களும் தடையாக உள்ளன**




UNHCR / R. Chalasani / 2002

## சுயேச்சையான மீள்திரும்புதல்

மீள்தவறு செய்யாமை எனும் சர்வதேச சட்ட வழமைக்கு ஏற்ப, அகதிகள் தாய் நாட்டிற்கு திரும்புவதற்கான அல்லது உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் மீள் திரும்புவதற்கான முடிவு, அரசாங்கத்தினதோ அலல்து நிவாரண நிறுவனங்களின் உந்துதல், தள்ளப்படுதல் போன்ற காரணிகளுக்கு ஆட்படாது நிச்சயமாக அவர்களின் பூரண சுயேச்சையான திரும்புதலாகவே அமையவேண்டும்.

தற்போது சமாதானப் பேச்சு வார்த்தைகளில் தடங்கல்கள் காணப்பட்டபோதிலும் அகதிகளின் தாய் நாட்டிற்கு திரும்புதலும், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் மீள்திரும்புதலும் தம் விருப்பத்திற்கு ஏற்ப சுயேச்சையாகவே இடம் பெற்றுக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ அறிக்கைகளுக்கு அமைய, 2002ம் ஆண்டு தை மாதம் முதல் 2003ம் ஆண்டு வைகாசி முடிவிற்குள் 307, 239 மக்கள் (80,123 குடும்பங்கள்) அகதிகள் நிலையிலிருந்து தாய்நாட்டிற்கும் உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களில் இருந்தும் சுயேச்சையாக தமது சொந்த இடங்களுக்கு மீளவும் திரும்பியுள்ளனர். உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் நடமாட்டங்கள் பற்றிய தரவுகளும் ஒருங்கமைந்த வரைபடங்களும் ஸ்ரீலங்காவிலுள்ள மனித நேய பங்காளிகளுக்கு அதாவது ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் அரசாங்க காரியாலயங்கள் போன்றவற்றுக்கு பெரும் உறுதுணையாக உள்ளது.

## உள்நாட்டில் ஒன்று சேர்தல்

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களில் பெரும்பான்மையானோர் மீண்டும் தமது சொந்த இடத்திற்கே மீளத்திரும்ப விருப்பம் தெரிவித்தபோதிலும், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களில் சிலர் தாம் இடம் பெயர்ந்த இடத்திலேயே நிரந்தரமாகத் தங்குவதற்குத் தீர்மானிக்கக் கூடும். சில சமயங்களில், இவ் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் தாம் தற்போது வசிக்கும் தற்காலிகமான வசிப்பிடங்களில் 10 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து அங்கு நிரந்தரமாக வாழ்ந்து வரும் சமூகத்தினருடன் பின்னிப் பிணைந்து வேரூன்றியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டில், இடம் பெயர்ந்த மக்களில் சிறு தொகையினர் தாம் தற்போது வாழுமிடத்தை விட்டு வேறோர் இடத்தில் குடியமரக் கேட்டுள்ளனர். இவர்களில் சிலருக்கு உள்ளூர் அரசாங்கத்தினால் அரசாங்கக் காணிகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உள்நாட்டில் ஒன்று சேர விரும்பும் மக்களுக்கும் அல்லது புதியதோர் இடத்தில் குடியமர விரும்பும் மக்களுக்கும் வேண்டிய உதவிகளையும் பாதுகாப்பினையும் வழங்குவதே அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்தின் கொள்கையாகும். இதனை திடமான தீர்வுகளை உருவாக்குவதன் மூலம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம் செய்கின்றது. அதாவது உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் அகதிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு நீடித்து நிலைத்திருக்கக் கூடிய தீர்வுகளேயாகும். இவற்றிற்கு உதாரணமாக பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் மீள் திரும்புதல், மீளக் குடியமர்தல், உள்நாட்டில் ஒன்றிணைதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.



UNHCR / M. DeSisti / 2002

# பாதுகாப்பு என்றால் என்ன?

பாதுகாப்பு என்பது அகதிகளுக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கும் வேண்டிய அடிப்படை மனித உரிமைகள் சம்பந்தப்பட்டதாகும். இவை குடிசன, அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளாகும். சர்வதேச உடன்பாடுகள் அகதிகளுக்கான உரிமைகளை ஆளுமை செய்கின்றது. இது அகதிகளைப் பாதுகாக்கும் முதன்மைப் பொறுப்பு நாடுகளுக்கும் அவர்களின் அரசாங்கங்களுக்கும் உரித்தானது என்பதனை உணர்த்துவதாகும். அதாவது அகதிகளைப் பாதுகாக்கும் முதன்மைப் பொறுப்பு முற்றிலும் சர்வதேச நிறுவனங்களைச் சார்ந்ததல்ல என்பதாகும். இருந்த போதிலும் ஐக்கிய நாடுகள் சபை, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்திற்கு அகதிகளையும் இடம் பெயர்ந்த மக்களையும் பாதுகாப்பதற்காக முன்னிலையில் நிற்பதற்கும் சர்வதேச நடவடிக்கைகளை இணைத்து செயற்படுவதற்கான கடமைப்பாட்டினையும் வழங்கியுள்ளது.

பாதுகாப்பு வழங்குவதே இக் கடமைப்பாட்டின் உள்ளார்ந்த நோக்கமாகும். இதுவே அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்தின் சகல பிரதிபலிப்புக்களையும், அதாவது கொள்கையளவிலும் நடைமுறைப்படுத்துவதிலும் வழி காட்டுதலாக அமைகின்றது. சம்பிரதாய முறையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம் பின்வரும் பாதுகாப்பு கடமைப்பாடுகளில் வேரூன்றியுள்ளது.

- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபன காரியாலயத்தின் சட்ட விதி முறைகள் (1949)
- அகதிகளின் நிலைமைகள் தொடர்பான மரபு முறையான ஒப்பந்தம்(1951) மற்றும் அத்துடனான குறிப்பு அறிக்கைகள் (1967)
- பிரஜாவுரிமையற்ற மக்களின் நிலைமைகள் தொடர்பான சம்பிரதாய ஒப்பந்தங்கள் (1954)
- பிரஜா்வுரிமையற்றவர்களைக் குறைப்பதற்கான ஒப்பந்தம் (1961)
- உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கான வழிகாட்டும் கொள்கைகள் (1998)

சட்ட விதிமுறைகள், சம்பிரதாய ஒப்பந்தங்கள், குறிப்பு அறிக்கைகள் ஆகியவை ஒன்றாக இணைந்து ஒரு சட்டத்திற்குட்பட்ட எல்லை வரம்பு த்ராதரத்தினை அகதிகளுக்கான பாதுகாப்பினை வழங்குவதற்கு உருவாக்குகின்றது. வழிகாட்டும் கொள்கைகள் சட்டத்திற்கு கட்டுப்படாதவைகளாக இருந்த போதிலும் அவை உள்நாட்டில் இடம் பெயர்ந்த அகதிகளை பாதுகாப்பதற்கான அதிகாரமுள்ள அறிக்கையாக முன்னிருக்கின்றது.

ஏனெனில் அகதிகள், இடம் பெயர்ந்த மக்கள் ஆகியோரின் தேவைகள் சிக்கல்கள் நிறைந்ததாகக் காணப்படுவதனால் அவற்றுக்கான திட்டமிடப்படும் தீர்வுகள் பரந்தளவிலும் விசாலமானதாகவும் அமைய வேண்டும். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம் உடல், பொருள், சட்ட மற்றும் மனோதத்துவ ரீதியில் ஏற்படும் தேவைகளுக்கு ஏற்றவாறு தனது செயற்திட்டங்களை மேற்கொள்கின்றது. அத்துடன் மட்டுமல்லாது, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம் வெவ்வேறு ஐக்கிய நாடுகள் நிறுவனங்களுடனும், சர்வதேச மற்றும் உள்ளூர் அரசு சார்பற்ற நிறுவனங்களுடனும் இணைந்து தேசிய நிறுவனங்களின் ஆற்றல்களை வலுவடையச் செய்ய உதவுகின்றது. பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம் ஆனால் மட்டுப்படுத்தப்பட்டவையல்ல.

- அகதி நிலையைத் தீர்மானிப்பதிலும், தஞ்சம் கோரும் நடைமுறைகளிலும் உதவுதல்.
- அடிப்படை சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பொருத்தமான நிருவாகிகளுடன் தலையிட்டு தொடர்பு கொள்ளல்.
- அகதிகளையும் இடம் பெயர்ந்த சிறுவர்களையும் பாதுகாப்பது.
- சிறுவர் இராணுவத்தினைக் கலைப்பதற்கும் பலவந்தமாக ஆட்சேர்ப்பினை நிறுத்துவதற்கும் பரிந்துரை செய்தல்.
- பாலியல் பலாத்காரங்களையிட்டு செயற்திட்டங்களை ஏற்படுத்துதல்.
- பிரஜாவுரிமையற்ற மக்களைப் பாதுகாத்தல்.
- உணவு அல்லாத பொருட்கள் கிடைக்க வழி செய்தல்.
- மனித நேய நிவாரண செயற்திட்டங்கள்
- சமாதானமாக ஒன்றிணைந்து வாழ்வதற்கான பயிற்சி நெறிகளும், திட்டங்களும்.
- வருமான விருத்தி செயற்திட்டங்கள்
- மீள் திரும்புவோர் மீளவும் ஒன்றிணைவதற்கான திட்டமிடுதல்.
- காணி, வீடு, சொத்தக்களுக்கான உரிமைகளைப் பாதுகாப்பது.

**"பாதுகாப்பு என்பது சந்தோஷத்தை நிரூபணப்படுத்தக்கூடிய, சமமான முறைகளில், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைவாகப் பெண்கள், ஆண்கள், சிறுமிகள், சிறுவர்கள் ஆகியோரின் உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படும்"**

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தாபனத்தின்
சர்வதேச பாதுகாப்பு இலாகா - ஆடி 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு பற்றி ஓர் கண நேரப் பார்வை

## அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரின் ஸ்ரீலங்கா நடவடிக்கைகள் பற்றிய ஓர் மேலோட்டம்

### அடிப்படை சட்ட உரிமைகளுக்கான பாதுகாப்பு

ஆகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரின் உள்ளார்த்தமான கடமைப்பாடு, அகதிகளுக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்குமான அடிப்படை சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதேயாகும். மனித உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனத்திலும், குடிசன மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உறுதி மொழி பிரகடனத்திலும் விவரிக்கப்பட்டுள்ள சில உரிமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன; தனிப்பட்ட ஒரு மனிதனின் வாழ்க்கை, சுதந்திரம், பாதுகாப்பு ஆகியவற்றுக்கான உரிமைகள்; தன்னிச்சையாக நியாயமற்ற முறையில் தடுத்து வைக்கப்படுவதற்கோ அல்லது சித்திரவதைக்கு ஆட்படுத்தப்படுவதற்கோ எதிரான உரிமைகள்; பாலியல் பலாத்காரத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கான உரிமை; சட்டத்தின் சமமாக நடாத்தப்படுவதற்கான உரிமை, போன்றவையாகும்.

ஸ்ரீலங்காவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் நிலையம் ஸ்ரீலங்காவின் சட்ட நிறுவனத்தின் சட்ட உதவி வழங்கும் சங்கத்துடன் சேர்ந்து, உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களினதும் மீள்திரும்புவோரினதும் அடிப்படை உரிமைகள் மீறல்கள் பற்றி கவனம் செலுத்துகின்றது. சட்ட உதவிகள் வழங்கும் சங்கம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரின் துணையுடன் நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் புத்தளம் மாவட்டத்திலும் காரியாலயங்களைத் திறந்துள்ளது. இக் காரியாலயங்களில் பணியாற்றும் சட்ட வல்லுநர்கள், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களினதும் மீளத் திரும்பியவர்களினதும் புகார்களைத் தீர்ப்பதற்கு இலவச வழியில் உதவுகின்றனர். இத்தகைய புகார்கள் பாலியல் அடிப்படையிலான பலாத்காரங்கள், தடுத்து வைத்திருத்தல், சித்திரவதை மற்றும் இராணுவத்திற்காகப் பலவந்தமாக ஆட்சேர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும் உள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் சட்ட உதவிகள் வழங்கும் சங்கத்துடன் இணைந்து செயற்படுவதோடு மட்டுமல்லாது தேசிய மனித உரிமைகள் ஸ்தாபனத்துடன் இணைந்தும் வடக்கு, கிழக்கிலுள்ள இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கின்றது. மனித உரிமைகள் ஸ்தாபனத்திற்கு உதவுவதால் ஸ்ரீலங்காவில் மனித உரிமைகளுக்கான மரியாதை தரும் கலாச்சாரத்தை கட்டியெழுப்ப முயல்கின்றது.

### ஆகதிகளினதும் தஞ்சம் கோருவோரினதும் பாதுகாப்பு

தனது உள்ளார்ந்த கடமைப்பாட்டின் ஒரு பகுதியாக, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் ஸ்ரீலங்காவில் அகதிகள் நிலையை அல்லது தஞ்சம் கோரும் தனிநபர்கள் தொடர்பான பாதுகாப்பில் ஈடுபட விரும்புகின்றது. ஆயினும் ஸ்ரீலங்கா 1951 இல் இடம் பெற்ற அகதிகள் நிலைமைகள் சம்பந்தப்பட்ட மாநாட்டிலோ அல்லது 1967 இல் கைச்சாத்தான முக்கிய அறிக்கையிலோ பங்குபற்றாத காரணத்தினால், ஸ்ரீலங்காவில் தஞசம் கோருவது பற்றிய கொள்கை விளக்கங்களோ அல்லது உள்நாட்டுச் சட்ட வரையாக்கங்களோ காணப்படவில்லை. இதன் விளைவாக ஸ்ரீலங்காவின் அகதி நிலை தீர்மானம் (RSD) எனும் விடயம் பல வருடங்களாக பிரத்தியேகமாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அகதிகள், தஞ்சம் கோருவோர் பற்றிய தேசிய கொள்கை ஒன்று இல்லாதவிடத்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரே இத்தகைய சம்பவங்களில், சம்பந்தப்பட்டோரை வெளிநாடுகளில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளில் அடிக்கடி ஈடுபட வேண்டியுள்ளது.

பங்குனி 2003ம் ஆண்டு வரை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் 37 தனி நபர்களின் நகர அகதி வழக்குத் தொகைகளைக் கையாண்டுள்ளது. இவை பெரும்பாலும் தென் ஆசியா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா போன்ற பகுதிகளிலுள்ள தனிப்பட்ட நபர்களையே உள்ளடக்கியதாகும். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் மீளத் திரும்பும் நிராகரிக்கப்பட்ட ஸ்ரீலங்காவின் தஞ்சம் கோருவோரினது நிலைமைகளையும் கண்காணிக்கின்றது - அதுவும் குறிப்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள் தஞ்சம் நிராகரிக்கப்படுவது தொடர்பாக சகல சர்வதேச சட்ட கொள்கைகளையும் பின்பற்றியுள்ளனவா என்பதனை உறுதி செய்கின்றது.

இவ்வாறானதோர் பிரச்சனை சுவிர்ஸலாந்திலிருந்து யு.என்.எச்.சி.ஆர்/சுவிஸ்/ஸ்ரீலங்கா ஆகியவற்றுக்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில் மீளத்திரும்பியவர்கள் மத்தியில் எழுந்தது. இத்தகைய நிலையை யு.என்.எச்.சி.ஆர் கண்காணித்தது. இவ்வாறான கண்காணிப்பே, ஸ்ரீலங்கா அரசுடன் செய்த கொண்ட இருதரப்பின் அடிப்படையில் வேறுநாடுகளிலிருந்து திரும்பும் தனிப்பட்ட நபர்களிடமும் காட்டப்படுகின்றது.இதற்கும் மேலாக, சர்வதேச பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினை 1951ம் ஆண்டு அகதிகள் நிலைமைகள் ஒப்பந்தத்திலும் அதோடு தொடர்புபட்ட 1967ம் ஆண்டின் முக்கிய குறிப்பு அறிக்கைகள் பத்திரத்திலும் கைச்சாத்திட பரிந்துரை செய்து வருகின்றது. பிராந்திய மட்டத்தில், பங்களாதேசம், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் ஸ்ரீலங்கா போன்ற நாடுகளின் அரசாங்கங்கள் சம்பந்தப்பட்ட சர்வதேச சட்ட பரிபாலனத்தில் கைச்சாத்திட பரிந்துரை செய்து வரும் பிரசித்தி பெற்ற நபர்கள் குழுவிற்கு (Eminent Persons Group) உதவிகளை வழங்கி வருகின்றது.



### ஓர் உள்நாட்டில் இடம் பெயர்ந்த நபருக்கும் ஓர் அகதிக்கும் இடையேயுள்ள வேறுபாடு யாது?

அகதி - அகதியாகக் கருதப்படுவதற்கு ஒரு நபர் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நாட்டின் எல்லையைக் கடந்தவராக இருக்கவேண்டும். 1951 இல் இடம்பெற்ற அகதிகளின் நிலை எனும் மாநாட்டின் வரைபின் பிரகாரம் ஓர் அகதி எனப்படுபவர் "ஒரு நபர் (ஆண்/ பெண்) தனது தாய்நாட்டிற்கு வெளியில் பின்வரும் காரணங்களில் ஒன்றிற்காக தனது இயலாமையினாலோ அல்லது விருப்பமின்மையினாலோ மீளத் திரும்ப முடியாமல் இருப்பவராகும். - அதாவது துன்புறுத்தல் அல்லது இனரீதியில், சமயரீதியில், தேசியரீதியில், ஒரு குறிப்பிட்ட சமூகத்தவரின் அங்கத்தவர் என்ற ரீதியில் அல்லது தனது அரசியல் எண்ணப்பாடு எனும் ரீதியில், நியாயபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஏற்படும் பயம் ஆகிய காரணங்களில் ஒன்றாக அமையலாம்."

உள்நாட்டில் இம் பெயர்ந்த நபர் - உள்நாட்டில் இடப்பெயர்வு தொடர்பான 1998ம் ஆண்டின் வழிகாட்டும் கொள்கைகளின் பிரகாரம் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் எனும் வரைபுக்குட்பட்டோர், "ஆயுத முரண்பாடுகள், பொதுவாக இடம் பெறும் வன்முறைச் சூழல்கள், மனித உரிமைகள் மீறப்படுதல் அல்லது இயற்கையினாலோ அல்லது மனிதனிலோ ஏற்படுத்தப்படும் அழிவுகள் போன்ற காரணங்களிற்காகவோ அதனால் ஏற்படக் கூடிய அபாயங்களிற்காகவோ தாம் வாழும் வீடுகள் அல்லது வழமையாக தாம் வாழும் இருப்பிடங்களிலிருந்து வெள்யேறுமாறு கட்டயப்படுத்தப்பட்டோ, கடமைப்பட்டோ வெளியேறியவர்களாவார்கள். அத்துடன் இவர்கள் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நாட்டின் எல்லையைக் கடக்காதவர்களாகவும் இருக்க வேண்டும்."

**1951 இல் இடம் பெற்ற அகதிகள் நிலைமைகள் ஒப்பந்தத்திலும் அதோடு தொடர்புபட்ட 1967ம் ஆண்டின் முக்கிய தஸ்தாவேஜுக்களிலும் ஸ்ரீலங்கா கைச்சாத்திடவில்லை. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் இச் சர்வதேச சட்ட அதிகாரப் பத்திரங்களினை ஸ்ரீலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொள்வது தொடர்பாக தொடர்ந்தும் ஆதரவு கேட்டு வருகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனத்திலுள்ள திட்டம்:

## அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் மீளத் திரும்பியோரின் சொத்துக்களுக்கான உரிமைகளைப் பாதுகாக்கின்றது

சொத்துக்கள் காணி மற்றும் வீடுகள் தொடர்பான உரிமைகளில் தெளிவின்மை காணப்படுதல் மீள் திரும்புகைக்கு பெரும் தடையாக அமைகின்றது. இவற்றில் சில பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன;

- முற்றாக அல்லது ஒரு பகுதியாக அழிந்துள்ள வீடுகள்.
- சொத்துக்கள் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் அமைந்திருப்பது.
- வீடுகள் /காணிகள் /சொத்துக்கள் இராணுவத்தினரால் அல்லது அனுமதியற்ற நபர்களால் பராமரிக்கப்படுவது.
- நிலக்கண்ணி வெடிகள் அல்லது வெடிக்காத நிலையிலுள்ள ஆயுதத் தளபாட நிலையங்களுக்கு அண்மையில் அமைந்திருப்பது.
- மூலாதாரப் பத்திரம் அல்லது சொத்துரிமையில் தெளிவின்மை.
- மூலாதார உரிமைப் பத்திரத்திலுள்ள குறைபாடுகள்.
- வர்த்தகம் மற்றும் தொழில் நடாத்தும் வசதிகள் அழிவடைந்த நிலை.
- விவசாய நிலங்களில் நிலக்கண்ணி வெடிகள் மற்றும் வெடிக்காத நிலையிலுள்ள ஆயுத தளபாடங்கள் ஏற்பட்ட அழிவுகளினால் அல்லது அவை அந்நிலங்களில் காணப்படுவதனால் ஜீவனோபாயத்தை இழப்பது.

மேற்கூறப்பட்ட பிரச்சனைகள் குறிப்பாக நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் காணப்படுகின்றன.

**காணி, வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கான உரிமைகள் பற்றிய ஆய்வு**

இத்தகைய பிரச்சனைகளின் பிரதிபலிப்பாக, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரும் தேசிய மனித உரிமைகள் ஆணையமும் இணைந்து பரந்தளவிலான ஆய்வொன்றினை மேற்கொண்டன. இதன் பிரகாரம் காணி, வீடுகள் மற்றும் சொத்துக்கள் பற்றிய பிரச்சனைகள் எத்தகையதோர் இறுதி சமாதானத் தீர்வின் போதும் தீர்க்கப்படவேண்டும் என்ற ஆலோசனையை வழங்கியது. இந்த ஆய்வு சமாதானத்தில் கலந்து கொள்ளும் குழுக்கள் காணி, வீடுகள் மற்றும் சொத்துக்கள் பற்றிய உரிமைகளுக்காக ஸ்ரீலங்கா ஆணையம் ஒன்றினை ஏற்படுத்துமாறு பரிந்துரைந்துள்ளது. இவ் ஆணையம் காணி, வீடுகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக எழும் சட்ட மற்றும் ஏனைய பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் ஓர் பிரச்சனை தீர்க்கும் நிறுவனமாக இயங்கும். இவ் ஆணையத்தினால் தீர்த்து வைக்க முடியாத பிரச்சனைகள் தீர்ப்பு வழங்கக் கூடிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இறுதியாக இவ் ஆய்வு சட்ட பூர்வமான, கொள்கைவாரியான சீர்திருத்தங்களை முன்மொழிகின்றது.

இவ் ஆய்வறிக்கை தற்போது தேசிய நிருவாகிகளினதும், சர்வதேச சமூகத்தினதும் பரிசீலனையில் உள்ளது.

## மனமுவந்த மீள்குடியமர்வின் போது அகதிகளுக்கான பாதுகாப்பு

2000ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையினைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து மனமுவந்த மீள்குடியமர்விற்காக வந்த ஸ்ரீலங்கா அகதிகள் மீது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரின் கவனம் திரும்பியது. இப் பிரச்சனை தொடர்பாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், ஸ்ரீலங்கா அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. அதாவது துன்புறுத்தப்படுவோம் என்ற பயத்தின் காரணமாக தமது தாய் நாட்டை விட்டு வெளியேறியவர்கள், நிலைமைகள் ஏற்புடைய பட்சத்தில் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்தவர்கள் ஆகியோரின் உரிமைகள் பேணப்பட வேண்டும் என பரிந்துரைத்தது.

இதனைத் தொடர்ந்து, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் இந்தியாவிலிருந்து ஸ்ரீலங்காவிற்கு மீளக் குடியமர்வதற்காக மனமுவந்து வரும் அகதிகள் பற்றிய ஆயத்தங்களைச் செய்வதற்கான செயலமர்வு ஒன்றினை 14ம் தகதி தை மாதம் 2003ம் ஆண்டு ஒழுங்கு செய்தது. செயலமர்வில் பங்கு பற்றியோர் வெளியிட்ட கூட்டறிக்கை, இந்தியாவிலிருந்து மீளவரும் அகதிகளின் உடல், சட்ட மற்றும் சொத்து பாதுகாப்பு பற்றி முன்னேற்றகரமான நிலைக்கு கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் பொறுப்பு வகிக்க வேண்டும் என உறுதியாக எடுத்துக் கூறப்பட்டது. இது எத்தகைய பரந்தளவில் ஒழுங்குபடுத்தப்பட்ட மனமுவந்த மீள் குடியமர்வு நடவடிக்கைகளுக்கும் ஓர் முன் நிபந்தனையாக அமைய வேண்டும் என்று விளக்கப்படுத்தப்பட்டது. இருந்த போதிலும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் மனமுவந்து மீள் திரும்ப விரும்புவோருக்கு உதவிகளைத் தொடர்ந்தும் வழங்கிய வண்ணமேயுள்ளது.

### நாடு திரும்பிய அகதிகளை UNHCR அலுவலர்கள் விமான நிலையத்தில் சந்திக்கின்றனர்



UNHCR / B. Barrett / 2003

## சுயேச்சையாக திரும்புவோரின் பாதுகாப்பு

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் ஸ்ரீலங்காவின் வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் காணப்படும் நிலைமைகள் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் பாதுகாப்பாகவும் கௌரவத்துடனும் திரும்பி வருவதற்கு இன்னமும் ஏற்புடையதல்ல என்ற எண்ணப்பாட்டினைக் கொண்டிருக்கின்றது. இருத்தபோதிலும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் தமது சொந்த இடங்களுக்கு தாமாகவே மனமுவந்து திரும்பும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு வேண்டிய உதவிகளையும் பாதுகாப்பினையும் வழங்கி வருகின்றது. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரின் சொற்பிரயோகத்தின் பிரகாரம் இத்தகைய மக்கள் சுயேச்சையாகத் திரும்புவோர் என அழைக்கப்படுகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப இவ்வாறு திரும்பிய மக்களில் தகுதியானோருக்கும் அல்லது மீளக் குடியமரும் குடும்பத்தவருக்கும் பொருளாதார உதவியினை (ஜீவனோதார உதவி) ஒன்றுபட்ட உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்குகின்றது. மாசி மாதம் 2003ம் ஆண்டு நடைமுறையில் வந்த ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் வழிமுறைகளின்படி போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாறான உதவிகளுக்கு தகுதியுடைய குடும்பங்கள் என இனங் காணப்படுவோர் தமக்குச் சட்டப்படி சொந்தமான காணியில் (அல்லது அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட) மீளத் திரும்புவோர் அல்லது மீளக் குடியமர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இதற்கும் மேலாக இவ்வாறான உதவிகளைப் பெறத் தகுதியானோர்களின் குடும்ப வருமானம் மாதமொன்றிற்கு 2500 ரூபாவிற்கு குறைவானதாகவும் இருக்க வேண்டும். ஜீவனோதார உதவித் திட்டத்தின் கீழ் தகுதியுடைய குடும்பங்கள் மொத்தமாக 25,000 ரூபாவைப் பெறுகின்றன.

ஆடி 2003ம் ஆண்டு காலப் பகுதியினுள், 18,706 குடும்பங்கள், பெரும்பான்மையாக யாழ்ப்பணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களைச் சார்ந்தவர்கள் இவ்வுதவிப் பணத்தைப் பெற்றுள்ளனர் உதவி வழங்குவோரினதும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கும் அமைய, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், ஒன்றுபட்ட உதவி வழங்கும் திட்டத்தினை பொதுவாக மேற்பார்வை செய்யவும், குறிப்பிட்ட காலப்பகுதிகளில் இத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் பற்றியும், அதன் பயன்களைப் பற்றியும் அவதானிப்பு அறிக்கைகள் வெளியிட ஒத்துக் கொண்டுள்ளது.

அத்துடன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் மீள் திரும்புவோரும், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களும் புதிய இடத்திற்கு வந்து சேர்ந்தவுடன் அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் அல்லாத ஏனைய பொருட்களையும் வழங்குவதில் உதவி புரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவுப் பொருட்கள் அல்லாத பொருட்களை வழங்குகின்றது

**அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் வழங்கும் ஓர் எடுத்துக்காட்டான " குடும்பப் பொதி" பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்**



UNHCR / B.Barrett / 2003

- 2 பிளாஸ்டிக் பாய்கள்
- 4 பிளாஸ்டிக் தட்டுகள்
- 4 பிளாஸ்டிக் கோப்பைகள்
- 1 பிளாஸ்டிக் பேசின்
- 2 துவாலைகள்
- 4 சலவைச் சவர்க்காரக் கட்டிகள்
- 4 குளியல் சவர்க்காரக் கட்டிகள்
- 1 மாதவிடாய் காலத்தில் பயன்படுத்தும் துணி
- 1 அலுமினிய சோஸ்பான் கோவை
- 1 கத்தி (மென்மையான/கூரிய)
- 1 நுளம்பு வலை
- 1 ஜீ.ஐ.வாளி
- 1 அலுமினிய நீர் பானை
- 1 புடவை (ஸாரி)
- 1 சாரம்
- 1 T சேர்ட்

மீள் திரும்புவோரின் உடனடித் தேவைகளான வெளிப்புற மற்றும் பொருட்கள் சம்பந்தப்பட்ட உதவிகளை வழங்குவதோடு மட்டுமல்லாது, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் தேசிய அதிகாரிகளுடனும் வளர்ச்சி நிறுவனங்களுடனும் இணைந்து மீள் ஒன்றிணைதல் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும் பங்கெடுத்துக் கொள்கின்றது. உதாரணமாக, மீள் திரும்புவோரின் வருமான உற்பத்தி திட்டங்களில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் உள்நாட்டிலுள்ள அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் சேர்ந்து பணியாற்றுகின்றது. இத்தகைய திட்டங்கள் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் சமூக மட்டத்தில் இடம் பெறுவனவாகும். ஏனைய திட்டங்கள் மீள் திரும்புவோரின் அதுவும் குறிப்பாக சிறுவர்களின் உள - சமூக தேவைகளுக்கு ஏற்றவாறு செய்யப்படுகின்றன.

## உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் பாதுகாப்பு

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் பாதுகாப்பு தொடர்பாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் ஆற்றும் வேலைத் திட்டம் உள்நாட்டில் இடப்பெயர்வு பற்றிய வழிகாட்டும் கொள்கைகளில் இருந்து பெறப்பட்டதாகும். உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களில் பெரும்பான்மையானோர் தம்மை வரவேற்றுக் கொள்ளும் சமூகங்களின் மத்தியிலும் அல்லது அரசாங்கத்தினால் நடாத்தப்படும் நலன்புரி நிலையங்களிலும் வாழ்கின்றனர். இரு சாராரையும் சேர்ந்த பலவீனப்பட்ட தனி நபர்களைப் பாதுகாப்பதிலும் அவர்களுக்கு உதவிகள் வழங்குவதற்குமான பல்வேறு செயற்திட்டங்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரினால் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

நலன்புரி நிலையங்களில் வாழும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் நிலைமைகள் மேலும் சீர்கெடுவதைத் தடுப்பதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து பாதுகாக்கின்றது. அரசாங்கத்தின் புள்ளி விபரங்களின்படி (31 வைகாசி 2003 வரையிலான) 63, 624 உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் 217 தற்காலிக நலன்புரி வீடுகளில் வசிக்கின்றனர். பல சந்தர்ப்பங்களில் மட்டுப்படுத்தப்பட்ட சௌகரீக வசதிகள், பரிதாபகரமான நிலைமைகள், சன நெருக்கடி அவற்றுடன் தொடர்புபட்ட பிரச்சனைகள் அத்துடன் அதிகளவில் காணப்படும் பாலியல் பலாத்காரங்களிற்கும் காரணமாக அமைகின்றன.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் தாம் பொறுப்பு வகிக்கும் எல்லைக்குட்பட்ட 90 நலன்புரி நிலையங்களின் நிலைமைகள் பற்றிய மதிப்பீடு ஒன்றினை நடாத்தியது. மேலே கூறப்பட்ட நிலையங்களில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் பத்து மிகவும் பலகீனமடைந்த நிலையங்களை அடையாளங்கண்டு, இந்நிலையங்களில் போதியளவு குடிநீர் கிடைப்பு, சுகாதாரம், மருத்துவம் மற்றும் வீட்டு வசதிகளை தரம் உயர்த்திக் கொள்ள அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற உத்தேசித்துள்ளது.

## வருமான உற்பத்தியுடன் தொடர்பான உதவி

நிவாரணம் பெறுவதிலிருந்து வளர்ச்சியடையும் முகமாக நிகழும் மாறும் காலகட்டத்தில் வருமான உற்பத்திக்கான ஆரம்பநிலை உதவி திடமான தீர்வுகளை அடையக் கூடியதற்கான முக்கியமானதோர் காரணியாக அமைகின்றது. நிரந்தரமான வருவாயினைத் தரக் கூடிய வாய்ப்பு இல்லாதவிடத்து, மீள்திரும்புதலும் உள்ளக ஒன்றிணைப்பும் நிலைத்து நிற்கக் கூடியவை அல்ல. மேலும் வருமான வாய்ப்புக்கள் அரிதாக இருக்கும் சூழலில் சமூகப் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகின்றன. இதனாலேயே, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் வருமான உற்பத்தி தனது பாதுகாப்பு கடமைப்பாடுகளில் முக்கிய இடத்தை வசிக்கின்றது என ஏற்றுக் கொள்கின்றது.

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கும் மீள் திரும்புவோருக்கும் அவர்களது வாழ்க்கையை மீள ஆரம்பிப்பதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் பல தரப்பட்ட வேலைத் திட்டங்களை வரையறுத்துள்ளது. இவ் வேலைத் திட்டங்கள் சமூகத்தைச் சார்ந்தவர்களின் விரிவான தேவைகளை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்டுள்ளன. மேலும் இவ் வேலைத் திட்டங்கள், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அச் சமூகத்திலிருந்து விலகும் கட்டத்தில், உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் வருமான உற்பத்தித் திட்டங்களை நிரந்தரமாக தக்க வைத்துக் கொள்வதற்கான அறிவையும் ஆற்றலையும் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்களாக வரையறுக்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரின் வருமான உற்பத்தித் திட்டங்கள் உள்நாட்டிலுள்ள அல்லது சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்தே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக திருகோணமலையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் சர்வோதயா மற்றும் இசட்.ஓ.ஏ. எனும் நிறுவனங்களுடன் இணைந்து சித்திரை முதல் மார்கழி 2003 வரையில் 1100 குடும்பங்களுக்கு உதவுவதற்கான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளது.

## நலன்புரி நிலையங்களில் வாழும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த அகதிகள் கடுமையான நிலைமைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்



UNHCR / B.Barrett / 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதான சகவாழ்விற்கான பூர்வாங்க வேலை

எந்தவோர் பன்முகப்படுத்தப்பட்ட சமூகத்திலும் சமாதானமான சகவாழ்வு மிகவும் தேவையான அடித்தளமாகும். சமாதான சகவாழ்வு என்பது அருகருகில் சாதாரணமாக வாழ்வதைக் காட்டிலும் மேலான நோக்கினைக் கொண்டதாகும்; சமாதான சகவாழ்வு தகவல்கள் பரிமாற்றம், ஒருவருக்கு ஒருவரிடையேயான செயற்பாடுகள் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றைக் கொண்டதாகும். 2002ம் ஆண்டில் பொஸ்னியா - ஹேர்சிகோவினா மற்றும் ருவாண்டாவில் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்ட இரண்டு முன்னோடி செயற்திட்டங்களின் அடிப்படையில், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், இன மோதல்கள், உள்நாட்டு கலவரங்கள் மற்றும் வன்முறைகளினால் ஆழமாகப் பிரிந்து காணப்படும் ஸ்ரீலங்கா சமூகத்தவரிடையே. ஓர் சமாதான சகவாழ்விற்கான பூர்வாங்க வேலைத்திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களை விரும்பி ஏற்றுக் கொண்டுள்ள சமூகத்தவரையும், மனமுவந்து மீள் திரும்பும் மக்களை ஒன்றிணைக்க முயற்சி மேற்கொள்ளும் சமூகத்தவரையும் இலக்காகக் கொண்டே இப் பூர்வாங்க வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மீள் ஒன்றிணையும் நடவடிக்கைகள் அநேகமாக பிரச்சனைகளை மீள புதுப்பிக்கவே வழி சமைக்கின்றன.

சமாதான சகவாழ்வு பூர்வாங்க வேலைத்திட்ட வரைபினுள், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், ஏற்படுத்தியுள்ள நடவடிக்கைகளில் ஒன்றாக பின்வரும் திட்டம் ஒன்று அமைகின்றது. அதாவது சமூக விழிப்புணர்வுகளைப் பரவச் செய்யும் தொடர்ச்சியான செயலமர்வுகளும், அரசு சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகஸ்தர்கள் மற்றும் உள்ளூர் தலைவர்களை சமாதான சகவாழ்விற்கு துணை நிற்பவர்களாக பயிற்றுவிப்பதுமேயாகும். இவ்வாறான செயலமர்வுகள், இதில் பங்குபற்றுவோர் அடிமட்டத்திலிருந்து சமாதான வளர்ப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு வேண்டிய கருவியாக முறைமையான சமாதானக் கல்வியறிவை பயன்படுத்துகின்றது.

### பயிற்சி பட்டறையில் பங்கு பற்றியவர்கள் சமாதான திட்டம் ஒன்றினை தயாரிக்கின்றனர்



UNHCR / L. McGrew / 2002

### ஆக்கபூர்வமான முறையில் விளையாடுகின்றனர்



UNHCR / L. McGrew / 2002

## கவனத்திலுள்ள செயற்திட்டம்

### சமாதான சகவாழ்வை அளிப்பதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் உள்நாட்டிலுள்ள அரசு சார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றுகின்றது

சமாதான சகவாழ்வை அளிப்பதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் உள்நாட்டிலுள்ள அரசு சார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றுகின்றது.

ஐப்பசி மாதம் 1990ம் ஆண்டு தமிழர் விடுதலை புலிகளின் இயக்கம் நாட்டின் வடக்கில் தமது கட்டுப்பாட்டிற்குள் இருந்த இடத்திலிருந்து சகல முஸ்லீம் மக்களையும் வெளியேற்றுவதாக 48 மணி நேர அவகாச அறிக்கையை வெளியிட்டது. அநேகமான முஸ்லீம் மக்கள் புத்தளம்/கற்பிட்டியா பகுதிகளுக்கு கடல் மார்க்கமாக வெளியேறினார்கள்.

ஆரம்ப காலகட்டத்தில் புத்தளம்/கற்பிட்டியா பகுதி மக்கள், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் அங்கு தொடர்ந்தும் இருந்தபோது மோதல் நிலைமைகள் தோன்ற ஆரம்பித்தன. வேலை வாய்ப்புக்கள், கல்வி, சுகாதார வசதிகள் ஆகியவற்றைப் பெறுவதில் உருவான போட்டி மனப்பான்மை கருத்து. வேறுபாடுகள் தோன்றக் காரணமாக அமைந்தது. மேலே குறிப்பிட்ட சேவைகளில் அநேகமானவை அங்கு நிரந்தரமாக வாழும் மக்களின் அல்லது அரசாங்க உத்தியோகஸ்தர்களின் கட்டுப்பாடுகளில் இருந்தமையினாலும், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் பிரதிநிதித்துவம் மிகக் குறைந்தளவில் காணப்பட்டமையினாலும், உள்நாட்டில் இடம் பெயர்ந்த, மக்கள் நியாயமற்ற முறையில் அடிக்கடி பாதிப்பிற்குள்ளாகினார்கள்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், சமாதானமும் சமூக நடவடிக்கையும் எனும் உள்ளூர் அரசு சார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து "வீட்டிற்கு வெளியிலிருக்கும் வீடு" எனும் செயற்திட்டத்தினை மேலே குறிப்பிடப்பட்ட மோதல் நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக செயற்படுத்துகின்றது. உள்வாங்கும் தன்மை, உடன்பாடான முடிவுகளை உருவாக்கும் நிலைமை போன்றவற்றின் மதிப்புக்களை பிரதிபலிக்கும் கலந்து கொள்ளும் வழிமுறைகளைப் பயன்படுத்தி, சமாதானமும் சமூக நடவடிக்கை உதவியாளர்கள் சமூக அடிப்படை நிறுவனங்களுடன் முரண்பாடான பிரச்சனைகளுக்கு அவர்களின் உணர்ச்சிகளை விரிவுபடுத்த முயற்சி செய்கின்றார்கள். சமாதானமும் சமூக நடவடிக்கை நிறுவனம் பாடசாலை குழுக்களுடன் இணைந்து, மாணவர்கள் பன்முக சமூகத்தில் பலன் தரக்கூடிய அங்கத்தவர்களாக மாற்ற அவர்களின் ஆற்றலை வளர்க்க முனைகின்றார்கள்.

அத்துடன் மட்டுமல்லாது சமாதானமும் சமூக நடவடிக்கை நிறுவனம், நிரந்தர வதிவிட வாசிகள், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் உள்ளூர் அரசாங்கங்களுடனும் இணைந்து புத்தளம் மாவட்டம் "சமாதானத் தீவு" ஒன்றினை உருவாக்கவும் உதவுகின்றது. இந் நடவடிக்கைகளில் பங்கு கொள்வோர் தமது மனக்கண்ணால் எவ்வாறு ஓர் சமாதானம் நிறைந்த புத்தளம் கற்பனையில் இருக்கும் என்பதனையும், எவ்வாறு தமது என்னத்தை நிஜமாக்க முடியும் எனவும் கேட்கப்படுகின்றனர். இவர்கள் காட்டும் பிரதிபலிப்புக்களின் துணையோடு சமாதானத்தை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ள பல்வேறு சமூகத்தவருக்கு ஏற்படும் கட்டுப்பாடுகள், விருப்பங்கள் மற்றும் தேவைகளுக்கு முகம கொடுக்க முயல்கின்றார்கள். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், இத்தகைய செயற்திட்டங்கள் நாடு பூராவும் இடம் பெற ஊக்கமளிக்கின்றது.



UNHCR / L. McGrew / 2002

### சமூக அளவில் தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்த பெண்களுக்கான பாதுகாப்பு

ஸ்ரீலங்காவில் இடம் பெயர்ந்த மக்களில் பெரும்பான்மையானோர் பெண்களாவர் யுத்தம் மற்றும் அதன் விளைவுகள் காரணமாக ஆண்கள் பாதிக்கப்படுவதனால், பெண்களே வீட்டுக் குடியிருப்பாளரின் தலைவியாக பங்காற்றுகின்றார்கள். பெண்களுக்கு சமூக பொருளாதார வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதனாலும், பாலியல் பலாத்காரங்களினாலும், இடர்பெயர்வின் போதும் மீள் திரும்புதலின் போதும் பெண்கள் தனிப்பட்ட முறையிலான சவால்களுக்கு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் தற்காலிகமாக தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் பாலியல் பலாத்காரங்கள் குறிப்பாக அதிகளவில் காணப்படுகின்றன. இப் பிரச்சனை அதிகளவில் போதைப் பொருட்கள், குடிப்பழக்கங்களால் மேலதிகமாகின்றது. இத்தகைய பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் முறையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், தன்னுடன் நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களோடு இணைந்து பாலியல் தொடர்பான பாதுகாக்கும் நடவடிக்கைகள் தொகுதியொன்றினை நடைமுறைப்படுத்த முயற்சிகளை மேற்கொள்கின்றது.


உதாரணமாக, வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு நலன்புரி நிலையங்களில் பாலியல் பலாத்காரங்கள் தொடர்பான வழக்குகள் பற்றி தொடர்ந்து கண்காணித்து வருவதுடன் அவ்வாறான வழக்குகள் தொடர்பான பதிவுகளையும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், பெண்களுக்கான வளர்ச்சி மையம் எனும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள அரசு சார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து ஒரு முன்னோடியான செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் செயற்திட்டத்தின் கீழ் சமூக உத்தியோகஸ்தர்கள் பாலியல் பலாத்காரங்கள் பற்றிய விழிப்புணர்வை கிராமிய மட்டத்தில் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

திருகோணமலையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், காந்தி சேவா நிறுவனத்துடன் சேர்ந்து பெண்கள் கலந்தாடும் குழுக்களை மூன்று வெவ்வேறு நலன்புரி நிலையங்களில் உருவாக்க முயற்சி எடுத்து வருகின்றது. ஒவ்வொரு குழுவும் 25 பெண்களைக் கொண்டதாகவும் பாலியல் பலாத்கார மருத்துவ ஆலோசனையில் விசேடமாக பயுற்றுவிக்கப்பட்ட ஒருவரைக் கொண்டதாகவும் கிழமையில் இரு தடவைகள் கூடுகின்றன. குழு ஆலோசனை நடைமுறைகளுக்கு மேலாக இப் பெண்கள், பெண்களுக்கான உரிமைகள் பற்றி பரந்த சமூக அளவில் தகவல்களைப் பரவச் செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், யாழ்ப்பாண சமூக நடவடிக்கை நிலையத்துடன் சேர்ந்து சிறுவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் பாலியல் பலாத்காரங்கள் தொடர்பாக செயலாற்றி வருகின்றது. இது, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பகுதிகளில் பெண்களுக்கான அதிகாரமளிக்கும் செயற்திட்டங்களினூடாக நிறைவேற்றப்படுகின்றது. இச் செயற்திட்டங்களின் பிரதான நோக்கம் யாதெனில் பெண்கள் பொருளாதார ரீதியில் சுதந்திரமாக வளர்ச்சியடைய உதவி அதன் மூலம் அவர்களின் பலவீனத் தன்மையைக் குறைப்பதேயாகும். யாழ்ப்பாண சமூக நடவடிக்கை நிலையம் தொழில்சார் பயிற்சிகளுடன் மட்டுமல்லாது, பொருளாதார முகாமைத்துவம், மனித உரிமைகள், பாலியல் பலாத்காரங்கள் பற்றிய விழிப்புணர்வு தொடர்பாகவும் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்குகளை ஏற்படுத்துகின்றன.

மேலே கூறப்பட்ட இடங்களைப் போன்று, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், புத்தளத்திலும் பாலியல் பலாத்காரங்கள் பற்றிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் விதமான திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டங்கள் உள்ளூரிலுள்ள அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்தே செயற்படுத்தப்படுகின்றன.

## அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் பாலியல் பலாத்காரங்கள் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வுகளை நடாத்துகின்றது


UNHCR / L. McGrew / 2002


UNHCR / R. Chalasani / 2002

**மறக்க வேண்டாம்! 20ம் திகதி ஆனி மாதம் உலக அகதிகள் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது**

ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் 20ம் திகதி உலகம் பூராவுமுள்ள கோடிக்கணக்கான மக்கள் ஒன்று கூடி உலக அகதிகள் தினத்தினைக் கொண்டாடுகின்றார்கள். இவ் வருடத்திற்காக எடுத்துக் கொண்ட விடயம் "இடம் பெயர்ந்த இளைஞர்கள் எதிர்காலத்தைச் சந்திப்பதற்காக" ஸ்ரீலங்கா பூராவிலுமுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் காரியாலயங்கள், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் சித்திர வேலைப்பாடுகள், விளையாட்டுக்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் உட்பட பல்வேறு நடவடிக்கைகளை நடாத்தி பங்கேற்றன.

முன்னாள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் சடாகோ ஒகாடா, "நாம் அவர்களின் தைரியத்தினையும் மீளும் தன்மையினையும் திடசங்கற்பத்தினையும் இட்டு கொண்டாட வேண்டும்............ அவர்களுக்கு ஓர் எதிர்காலம் உண்டு என்பதனை பற்றி அவர்கள் உணரவும் நம்பிக்கை கொள்ளவும் செய்ய வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்த சிறுவர்கள்
# தராதரமான கல்வி
# யைப் பெறுவதற்கு உரிமை உடையவர்கள்



UNHCR / B.Barrett / 2003

## இடம் பெயர்ந்த சிறுவர்களின் பாதுகாப்பு

முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தேவைகள் அபூர்வமானவை. ஆயுத முரண்பாடுகளுக்கு உள்ளாகும் சிறுவர்கள் மாறாத வடுக்களுக்கு ஆளாகின்றனர். முரண்பாடுகளுக்குப் பின்னர் இடம் பெறும் மாறுதல்களின் போதும் இவ்வடுக்களை ஆறவைப்பது கடினமான செயலாகும். எனவே இவ்வாறான சுற்று நிகழ்ச்சிக்கு ஆரம்பிப்பதற்கு முதலே அதனை நிறுத்துவது தேசிய அதிகாரிகளுக்கும், சர்வதேச நிறுவனங்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் கண்டிப்பான கடமையாகும்.

ஐக்கிய நாடுகளின் நிறுவனத்தைச் சார்ந்த யுனிசெவ் நிறுவனமே சிறுவர்களைப் பாதுகாக்கும் கடமைப்பாடுள்ள முதன்மை நிறுவனமாகும். இருந்த போதிலும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், தமது கடமைப்பாட்டிற்கு ஏற்றவாறு தாமும் சிறுவர்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

வயதிற்கு குறைந்தவர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பான பிரச்சனைகளில், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், யுனிசெவ் நிறுவனத்தின் நெருங்கிய துணையோடு அதிகாரிகளின் கவனத்திற்கு இம் முறைப்பாடுகளைக் கொண்டு செல்வதுடன் தெரிந்த நிகழ்ச்சிகளின் முன்னேற்றங்களை கண்காணிப்பதுடன் அத்தகைய தவறுகள் புரிவோர் மீது அழுத்தங்களையும் கொண்டு வருகின்றது. 2003ம் ஆண்டு வைகாசி மாத முடிவில், ஏனைய ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களின் உதவியுடன் யுனிசெவ் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் தகவல் அடிப்படையில் ஸ்ரீலங்காவில் 1370 வயது குறைந்தவர்களின் ஆட்சேர்ப்பு வழக்குகள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 315 முறைப்பாடுகளில் ஆட்கள் விடுவிக்கப்பட்டும் ஏனைய 936 வழக்குகள் தீர்க்கப்படாமலும் இருக்கின்றன. இவற்றைப் பற்றிய தகவல்களை பரிமாறிக் கொள்ளும் முயற்சியில், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், யுனிசெவ் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஆகியவை இணைந்து வயது குறைந்தோர் ஆட்சேர்ப்பு செயற்குழு ஒன்றினை வடக்கு, கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களிலும், கொழும்பிலும் ஏற்படுத்தி அதில் ஒழுங்காக ஒன்று கூடுகின்றன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான செயற்திட்டம் ஒன்றினை யுனிசெவ் நிறுவனம் ஏற்படுத்தத் துணை புரிந்தது. இச் செயற்திட்டம் ஆனி மாதம் 2003 இல் ஸ்ரீலங்கா அரசினதும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினதும் அனுமதியைப் பெற்றது. இச் செயற்திட்டம் பலவீனமான நிலையிலுள்ள சிறுவர்கள், கடினமான வேலைகளில் ஈடுபடும் சிறுவர்கள், வீதியில் அலையும் சிறுவர்கள், இராணுவத்திலுள்ள சிறுவர்கள் ஆகியோரின் தேவைகளுக்கு முகம் கொடுக்கின்றது.

## பிரஜாவுரிமையற்ற மக்களின் பாதுகாப்பு

ஒரு பிரஜாவுரிமையற்ற மனிதன் எனப்படுபவன் "எந்தவொரு நாட்டிலும் அதன் நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் குடிமகனாகக் கருதப்படாதவன்" எனப் பொருள்படும். ஸ்ரீலங்காவைப் பொறுத்த வரையில் இச்சட்ட வரைவிலக்கணம் "மலைநாட்டுத் தமிழர்கள்" என அழைக்கப்படும் சிலருக்குப் பொருந்துகின்றது. இத்தகையதோர் 19ம் நூற்றாண்டில் பிரித்தானியர்களினால் தென் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தேயிலைத் தோட்ட வேலையாட்களின் வம்சாவழியினராவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரம் அடைந்ததன் பின்னர், 1948 இல் நிறைவேற்றப்பட்ட இலங்கை குடியுரிமைச் சட்டத்தின் கீழ் குறைந்தளவிலான மலையகத் தமிழ் மக்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இம் மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவாக இந்தியா - இலங்கை ஒப்பந்தங்களின் கீழ் இந்தியாவிற்குத் திரும்பியோருக்கு அந்நாட்டு பிரஜாவுரிமையையும், இலங்கையில் தங்கியுள்ள பெரும்பான்மையோருக்கு இலங்கையில் பிரஜாவுரிமை வழங்கவும் சட்டங்கள் இயற்றப்பட்டன.

எவ்வாறாயினும் இம் முயற்சிகள் ஸ்ரீலங்காவில் வாழும் 80,000 மலையக தமிழ் மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்க முடியாது போனதால் இவர்கள் பிரஜாவுரிமையற்ற மக்களாகவே வாழ்கின்றனர். பிரஜாவுரிமையற்ற மக்களின் நிலைமை தொடர்பான 1954ம் ஆண்டு மாநாட்டு ஒப்பந்தத்திலும் 1961ம் ஆண்டின் பிரஜாவுரிமையற்றோரின் எண்ணிக்கையை குறைப்பதற்குமான மாநாட்டு ஒப்பந்தத்திலும் ஸ்ரீலங்கா கைச்சாத்து இடாமையினால் மேற் குறிப்பிடப்பட்ட மலையக தமிழ் மக்கள், உள் நாட்டுச் சட்டத்தின் கீழ் குறைந்தளவிலான பாதுகாப்பையே பெறுகின்றனர். மலையக தமிழ் மக்களில் இந்தியா குடியுரிமை பெற்றவர்கள் இந்தியாவிற்கு மீண்டும் சென்று குடியமராது ஸ்ரீலங்காவையே தமது தாயகமாக விரும்பும் மக்கள் பற்றியும் சில அமைப்புக்கள் கவனத்தைத் தெரிவித்துள்ளனர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் 1954, 1961 மாநாட்டு ஒப்பந்தங்களில் ஸ்ரீலங்கா அரசினை பங்குகொள்ளுமாறு தொடர்ந்தும் பரிந்துரை செய்கின்ற போதிலும், சமீபத்தில் வெளிவந்த பத்திரிகைகள் செய்திகளின்படி ஸ்ரீலங்கா அரசு பாதிக்கப்பட்ட மலையக தமிழ் மக்களுக்கு குடியுரிமை வழங்க உத்தேசித்துள்ளதை வரவேற்கின்றது. இப் பிரேரணை நடைமுறைப்படுத்தப்பட்டால் அது மலையக தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் பிஜாவுரிமையற்ற நிலைமையை வெற்றிகரமாகத் தீர்த்து வைக்கும்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கான பாதுகாப்பு திட்டங்களின் வழியில்' அமைந்த தடமான தீர்வுகளை இவ் மலையக தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காகவும் வழங்க நடவடிக்கை எடுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்காவின் சகல பிராந்தியங்களுக்குகான மனிதநேய நிவாரண உதவி


UNHCR / B.Barrett / 2003

இறுதியாக, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் தேசிய அதிகாரிகளுடனும் பல்வேறு நிறுவனங்களுடனும் இணைந்து, இயற்கையினாலோ அல்லது மனிதனினாலோ ஏற்படுத்தப்பட்ட அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவிகளையும் பாதுகாப்பினையும் வழங்குவதில் செயற்படுகின்றது. உதாரணமாக, வைகாசி 2003 இல் இடம் பெற்ற குறிப்பாக ஸ்ரீலங்காவின் தென், தெனமேற்கு பகுதிகளில் ஏற்பட்ட பலத்த பருவ மழை, கடந்த 50 வருடங்களில் இல்லாதவாறு பெரும் வெள்ள அபாயங்களையும் நிலச்சரிவுகளையும் ஏற்படுத்தியது. ஆறு மாவட்டங்கள் அதாவது, இரத்தினபுரி, காலி, களுத்துறை, மாத்தறை, நுவரேலியா மற்றும் அம்பாந்தோட்டை ஆகியனவாகும். பாதைகள், பாலங்கள், மின்சாரம் மற்றும் தொலைபேசி உட்கட்ட அமைப்புக்கள் பலத்த பாதிப்புக்களுக்கு இம் மாவட்டங்களில் உள்ளாகின.


UNHCR / M. DeSisti / 2003

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரும் ஏனைய ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களும், மருத்துவ உதவிகள், நிவாரணப் பொருட்கள், குடிநீர், நீரைத் தூய்மைப்படுத்தும் மாத்திரைகள், உணவு இவற்றுடன் பாடசாலைகள் மற்றும் ஏனைய பொதுமக்கள் கட்டடங்களை மீளக் கட்டுவதிலும் உதவிகள் வழங்கின. சகல மாவட்டங்களிலும் வெள்ளநீர் அபாயங்கள் தற்போது தணிந்து காணப்பட்டாலும், துப்பரவு செய்யும் நடவடிக்கைகள் பல மாதங்களுக்கு நீடிக்கலாம். அரசாங்க அறிக்கைகளின்படி பின்வரும் முதன்மை நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. - அவையாவன; குடிநீரையும் சுகாதார வசதிகளையும் பெற்றுக் கொள்வதற்கான முன்னேற்றங்கள், மருத்துவ கண்காணிப்பு, மற்றும் பாதிப்படைந்த உட்கட்டமைப்புக்களை மீளக் கட்டியெழுப்புதல் போன்றவையாகும். இதற்கும் மேலாக நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்த நிலையிலேயேயுள்ளன. இவ்வாறு பலவீனமடைந்த மக்களுக்கு திடமான தீர்வுகளைப் பெற்றுத் தருவதில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் தேசிய அதிகாரிகளுக்கு உதவுகின்றது.




UNHCR / B. Barrett / 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்காவில் உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் மீள் திரும்புகை - மாவட்ட ரீதியாக (தை, 2002 முதல் வைகாசி 2003 வரையிலான காலப்பகுதி)

UNHCR
The UN Refugee Agency

UNHCR
GIS Unit
Sri Lanka




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் நீங்கள் காட்டும் ஆதரவிற்கு நாம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். மேலதிகத் தகவல்களுக்கு எமது எந்வொரு காரியாலயத்துடனும் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.**

யு.என்.எச்.சி.ஆர். இலங்கைப் பிரதிநிதி,
97, றோஸ்மீட் பிளேஸ்,
கொழும்பு 7.
**011-2683-968**
**Lkaco @unhcr.ch**

**வலயம் 1:**

யாழ்ப்பாண வெளிக்கள காரியாலயம்
223, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
**021-2223-663**
**Lkaja@unhcr.ch**

கிளிநொச்சி செய்மதி காரியாலயம்
**021-228-5722 or 021-228-5764**
**lkaki@unhcr.ch**
**hcrkali!unhcr.ch**

**வலயம் 2:**

வவுனியா வெளிக்கள காரியாலயம்
210–25 கோவில் வீதி,
குருமணக்காடு, வவுனியா.
**024-2222550**
**Lkava@unhcr.ch**

மன்னார் செய்மதி காரியாலயம்
மூர் வீதி, மன்னார்.
**023-2232380**
**lkama@unhcr.ch**

திருகோணமலை செய்மதி காரியாலயம்
63, தபாற்கந்தோர் வீதி,
திருகோணமலை.
**026-22240-27 or 026-22218-45**
**lkatr@unhcr.ch**

மட்டக்களப்பு செய்மதி காரியாலயம்
53 பீ, லேடி மன்னிங் ட்ரைவ்,
மட்டக்களப்பு.
**065-22264-78**
**Lkaba@unhcr.ch**

**வலயம் 3:**

வெளிக்கள அலுவலகம் கொழும்பு
(புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவையும் தெற்கும் உள்ளடங்கலாக)
97, றோஸ்மீட் பிளேஸ்,
கொழும்பு 7.
**011-2683-968 ext. 358**
**Genaille@unhcr.ch**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Designed & Printed by KALAMAZOO